வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 06.03.2025 வியாழக்கிழமை இதழ் : 65 பக்கங்கள் : 12




# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கை நிறுத்தப்படவேண்டும்!

## மனித உரிமை பேரவையில் புதிய தீர்மானம் கோரி இணை அனுசரணை நாடுகளுக்கு முன்னணி கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 06

**ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்காலத்தில் கொண்டுவரப்படும் தீர்மானம் தமிழ் மக்களின் சம்மதத்தை பெறவேண்டும் என்றால் இலங்கையை சர்வதேச நீதிமன்றிலும் (ஐ. சி. சி.) ஏனைய சர்வதேச நீதி கட்டமைப்புகளிலும் நிறுத்தும் புதிய தீர்மானம் அவசியம்.**

- இவ்வாறு வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரத்துக்கு இணை அனுசரணை வழங்கும் நாடுகளின் தூதரகங்களுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செ. கஜேந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

2021 ஜனவரி 15, பெப்ரவரி 24, செப்ரெம்பர் 8, 2022 பெப்ரவரி 25ஆம் திகதிகளில் கூட்டாக வெளியிட்ட கடிதங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே - தீர்மானத்தின் நகல்வடிவம் வெளியாவதற்கு முன்னரே நாங்கள் முன்னைய தீர்மானங்கள் குறித்து ஏமாற்றமடைந்துள்ளோம். அவை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை. குறிப்பாக சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் எனத் தெரிவித்திருந்தோம்.

11



# சிறந்த நகர திட்டமிடல் மூலம் சுற்றுலாவிகளை ஈர்க்கலாம்!

### ஜனாதிபதி அநுர குமார

கொழும்பு, மார்ச் 06

சம்பிரதாய கட்டுமானங்களுக்கு அப்பாலான சரியான நகர திட்டமிடல் முறையின் மூலம் இலங்கையை கவர்ச்சிகரமான சுற்றுலாத் தளமாக மாற்ற முடியுமென ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்தின் அதிகாரிகளுடனான நேற்றைய சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நகர அபிவிருத்தியை திட்டமிடும் போது இலங்கையின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் திட்டங்களை தயாரிக்க

11

# இரு பெருந்துடுப்பாட்ட போட்டிகள் இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மார்ச் 06

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதும் 'வடக்கின் பெரும் போர்', சென். பற்றிக்ஸ் கல்லூரி - யாழ்ப்பாண கல்லூரி அணிகள் மோதும் 'பொன் அணிகளின் போர்' பெருந்துடுப்பாட்டப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன.

**வடக்கின் பெரும் போர்**

யாழ்ப்பாணத்தின் மிகப் பழமையான இந்தப் பெருந் துடுப்பாட்டப் போட்டி 118ஆவது ஆண்டாக இந்த ஆண்டு நடைபெறவுள்ளது.


இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை தொடர்ச்சியாக மூன்று தினங்கள் போட்டி நடைபெறும். இன்றைய தினம் காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் போட்டி ஆரம்பமாகும்.

இதுவரை, 39 போட்டிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரியும் 29 போட்டிகளில் யாழ். மத்திய

11

# இந்தியாவை மீறி வடக்கில் வேறு நாட்டை அனுமதியோம்!

### செல்வம் அடைக்கலநாதன் எம். பி.



கொழும்பு, மார்ச் 06

வடக்கில் இந்தியாவை மீறி எந்தவொரு நாட்டின் தலையீட்டையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் - இவ்வாறு பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி, சீனா வடக்கில் என்ன அர்த்தத்தோடு மீனவர்களை நாடுகிறது - என்றும் கேள்வி எழுப்பினார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

கடந்த கால அரசாங்கங்கள் செய்கின்ற தவறுகளை சுட்டிக் காட்டும் நிலைமை

11

# சுகாதார துறை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு நிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 06

நாடளாவிய ரீதியில் இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை இடைநிறுத்த நிறுத்த சுகாதார நிபுணர்களின் சங்கம் தீர்மானித்துள்ளது.

வரவு - செலவு திட்டத்தின் மூலம் சுகாதாரத் துறையில் கொடுப்பனவுகளை குறைப்பது தங்களின் தொழிலைப் பாதிக்கும் என்று குற்றஞ்சாட்டி இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு

11

# தமது மீனவரை இந்தியா கட்டுப்படுத்த வேண்டும்!

### இதுவே அது வடக்கு மக்களுக்கு செய்யும் நன்மை என்கிறார் பிமல்

கொழும்பு, மார்ச் 06

வடக்கு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கம் இந்தியாவுக்கு இருந்தால் தனது நாட்டு மீனவர்களின் சட்டவிரோத செயல்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். இந்திய சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்தி இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வை இந்தியா வழங்க வேண்டும் - என்று அமைச்சர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

11

# இந்திய மீனவரால் ஒருநாளில் ரூ. 35 கோடி மீன்வளம் இழப்பு!

### தேசிய மக்கள் சக்தி எம். பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 06

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடியால் வடக்கு கடற்பரப்பில் நாளொன்றுக்கு சுமார் 35 கோடி ரூபாய் பெறுமதியான மீன் வளங்கள் சூறையாடப்படுகின்றன என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் தெரிவித்துள்ளார்.

பல மணி நேரம் தொடர்ச்சியாக இழுவை

11

# கல்வி கட்டமைப்பை மாற்ற கல்வி பேரவை நிறுவப்படும்

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

நாட்டில் கல்வி கட்டமைப்பை மாற்றியமைக்க 'கல்வி பேரவை'யை நிறுவ அரசாங்கம் தயாராக உள்ளது என்று பிரதமரும் கல்வி, உயர்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வி நிறுவனத்தில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"2026ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள

11

# ரூ. 6 கோடி செலவில் மன்னார், முல்லையில் தீயணைப்பு பிரிவு

### உள்ளூராட்சிமன்ற அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தீயணைப்பு பிரிவு அமைப்பதற்காக உலக வங்கியின் உதவியுடன் 6 கோடி ரூபாய் பெறுமதியான வேலைத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர்

11

# இந்திய மீன்பிடியை கட்டுப்படுத்துங்கள்

### ரவிகரன் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 06

வடக்கு, கிழக்கின் கடலோர மக்களில் பெரும்பாலானோர் மீன்பிடிசார் தொழிலையே நம்பியுள்ளனர். இதுவே அவர்களின் ஒரேயொரு வாழ்வாதார நடவடிக்கை. அதனை சுரண்டும் விதத்தில் செயல்படும் இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை அளவை குறைப்பதால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது!

## விஜேதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 06

வரப்பிரசாதங்களை குறைப்பதன் மூலமோ அல்லது அமைச்சரவையின் அளவைக் குறைப்பதன் மூலமோ நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என முன்னாள் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வரப்பிரசாதங்களை குறைப்பதன் மூலமோ அல்லது அமைச்சரவையின் அளவைக் குறைப்பதன் மூலமோ நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

நாட்டில் நிலவும் சிக்கலான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அமைச்சரவையில் குறைந்தது முப்பது உறுப்பினர்களாவது இருக்க வேண்டும்.

அத்தகைய அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுக்கு வரப்பிரசாதங்கள் வழங்கப்படுவதால் நாடு வீழ்ச்சியடையாது.

நாட்டை அபிவிருத்தி செய்ய ஒரு திட்டம் இருக்க வேண்டும்.

கடந்த அரசாங்கங்களின் ஆட்சியாளர்களும் தலைவர்களும் ஊழல் நிறைந்தவர்கள் என்ற கூற்றை எதிர்த்து எந்த வாதமும் இல்லை. அவர்கள் நாட்டை மட்டுமல்ல, அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சியையும் கூட அழித்து விட்டனர்.

இதுபோன்ற தவறான ஆட்சியாளர்கள் சட்டத்தின் படி கையாளப்பட வேண்டும்.

தவறுகள் அல்லது குற்றவாளிகளைப் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டு, தவறுகளையும் குற்றவாளிகளையும் அடையாளம் கண்டு, சட்டத்தை அமல்படுத்தி, நாட்டை எவ்வாறு மேம்படுத்துவது என்பதைத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் அந்த வழியில் செயல்படுமா என்று மக்கள் காத்திருக்கிறார்கள் - என்றார். (அ)

# ஆளும்கட்சிக்கு ஒரு நீதி எனக்கு வேறொரு நீதியா?

## ஆக்ரோஷமடைந்த அர்ச்சுனா எம்.பி.

கொழும்பு, மார்ச் 06

ஆளும் கட்சிக்கு ஒரு நீதி எனக்கு ஒரு நீதியா என பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சபாநாயகரிடம் கேள்வியெழுப்பினார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் தனது கருத்தை முன்வைக்க நேரம் வழங்கப்படாமை குறித்து கேள்வியெழுப்பும் சந்தர்ப்பத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆளும் கட்சி முன்வைத்த கருத்து தொடர்பில் தனது கருத்தை தெரிவிப்பதாகக் கூறி இராமநாதன் அர்ச்சுனா ஒரு நிமிட நேரத்தை கோரியிருந்தார்.

அவருடைய கோரிக்கைக்கு ஏற்ப அவருக்கான ஒரு நிமிடம் வழங்கப்பட்டது. எனினும், அவர் மற்றுமொரு கருத்தை முன்வைத்த காரணத்தினால் சபாநாயகர் அவரை மறுத்தார்.

அதற்கு பதிலளிக்கும் விதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா,

"ஆளும் கட்சிக்கு ஒரு நீதி, எனக்கு ஒரு நீதி. நீங்கள் என்னை இடையூறு செய்கிறீர்கள், மறுபடியும் எனக்கு ஒரு நிமிடம் தாருங்கள்.

ஏன் நீங்கள் எங்களுக்கான நேரத்தை ஒதுக்குவதில்லை. முக்கியமான ஒரு காரணத்தை முன்வைக்க நேரத்தை தாருங்கள்.

பக்கச்சார்பாக நடந்துக் கொள்ள வேண்டாம். " எனத் தெரிவித்தார். (அ)

# உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 06

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு நேற்று நண்பகல் வரை ஐந்து மாவட்டங்களின் வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, கண்டி, கொழும்பு, கம்பஹா, அம்பாறை மற்றும் இரத்தினபுரி ஆகியவை அந்த ஐந்து மாவட்டங்கள் ஆகும்.

கட்டுப்பணம் செலுத்துவது தொடர்பிலான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் அறிவித்திருந்தது.

கண்டி மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் எதுவும் இது வரை தேர்தலுக்கான கட்டுப் பணத்தை செலுத்தவில்லை.

எனினும், ஒரு சுயாதீனக் குழு கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளது.

கண்டி மாவட்டத்தில் ஒரு உள்ளூராட்சிச் சபை மாத்திரமே காணப்படுகிறது.

இதேவேளை, 12 உள்ளூராட்சிச் சபைகளை உள்ளடக்கிய கொழும்பு மாவட்டத்தில் ஒரு அரசியல் கட்சி மற்றும் ஐந்து சுயாதீன குழுக்கள் தேர்தலுக்கான கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளன.

கட்டுப் பணம் செலுத்துவதற்கான காலம் கடந்த 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 56 இலட்சம் பேர் வறுமையில் அஸ்வெசும மட்டும் போதுமா?

## சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி

கொழும்பு, மார்ச் 06

அஸ்வெசும கொடுப்பனவை வழங்குவதன் மூலம் மாத்திரம் வறுமையை ஒழிக்க முடியுமா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர்,

29 வீத வறுமை நாட்டில் காணப்படுகிறது என ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.


நீங்கள் சபையில் முன்வைத்திருக்கின்ற 2024 முன்னேற்ற அறிக்கையில் செயற்றிட்டமாக 2025 தொடக்கம் 2029 வரையான காலப்பகுதிகள் வறுமைக்கு முகம் கொடுத்து இருக்கின்ற இரண்டு மில்லியன் குடும்பங்களை வலுவூட்டுவதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அதாவது இரண்டு மில்லியன் குடும்பங்களை வலுவூட்டுவது என்பது சிறந்ததொரு விடயம். என்றாலும் இந்த நாட்டில் முழுமையான வறுமை நிலை என்ன?

உலக வங்கி அறிக்கையை பார்த்தால் 56 இலட்சம் பேர் இலங்கையில் வறுமையில் உள்ளனர். இவ்வாறான தரவுகளைக்கூட தெரிந்து கொள்ளாமல் எப்படி வறுமையை ஒழிப்பது?

இந்த அஸ்வெசும கொடுப்பனவை வழங்குவதன் மூலம் மாத்திரம் வறுமையை ஒழிக்க முடியுமா? வறுமையை ஒழிப்பதற்கு சேமிப்பு, முதலீடுகள், உற்பத்தி, ஏற்றுமதி, நுகர்வு இந்த ஐந்து பகுதிகளும் அதில் காணப்பட வேண்டும் - என்றார். (அ)

# உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் இலக்கண நூல் அன்பளிப்பு



வடமராட்சி, மார்ச் 06

தமிழ் அறிஞர் கே. பி. முத்தையா எழுதிய தமிழ் அறிவு என்ற தமிழ் இலக்கண நூல் வடமராட்சி கிழக்கு கோட்டத்துக்கு உட்பட்ட 5 பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வு வடமராட்சி கிழக்கு கோட்ட கல்வி பணிப்பாளர் செல்லத்துரை சிறீ இராமச்சந்திரனின் ஒருங்கிணைப்பில் முன்னெடுக்கப்பட்டது.

கட்டைக்காடு றோ. க. த. க. பாடசாலை, ஆழியவளை சிலோன் சேர்ச் தமிழ் கலவன் வித்தியாலயம், உடுத்துறை மகா வித்தியாலயம், அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, மணல்காடு றோ. க. த. க. பாடசாலை ஆகியவற்றுக்கே இந்த நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் செயலாளர் இரா. துரைரத்தினம், பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ. சா. அரியகுமார், மூத்த ஊடகவியலாளர் எஸ். தில்லைநாதன் பாடசாலை அதிபர்களான தவகோபால் யோகலிங்கம், கந்தசாமி சிவநேசன், நடராசா தேவராசா, குமாரவேல் கண்ணதாசன், கணேசமூர்த்தி உதயசீலன் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-02)

# சர்வதேச நுகர்வோர் தினத்தில் குரங்கு, மயில்களை எண்ணுவதா?

## தேசிய பாவனையாளர் முன்னணி எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 06

சர்வதேச நுகர்வோர் தினத்தை குரங்குகளையும் மயில்களையும் எண்ணும் தினமாக அறிவித்து, நாட்டு மக்களை அரசாங்கம் அவமானப்படுத்தியுள்ளதாக தேசிய பாவனையாளர் முன்னணி தெரிவித்துள்ளது.

அந்த முன்னணியின் தலைவர் அசேல சம்பத் கொழும்பில் நேற்று காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை எட்டு மணிக்கு குரங்குகளையும் மயில்களையும் எண்ணுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சர்வதேச நுகர்வோர் தினமான அன்று இவ்வாறான தொரு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதை நாம் கடுமையாக எதிர்க்கிறோம்.

இது நுகர்வோரை அவமானப்படுத்தும் செயற்பாடாகும். இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்தவர்கள் யார்?

நுகர்வோரை பாதுகாக்கும் தினத்தில் மக்களை அவமானப்படுத்தும் வகையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனின் இந்த நாளைப் பற்றி அறிந்திராதவர்கள்தான் இது தொடர்பில் தீர்மானித்திருக்கிறார்கள்.

இது குறித்து கேள்வி எழுப்பினால் அமைச்சர் வசந்த சமரசிங்க பொருத்தமில்லாத பதில்களை வழங்குவார்.

இந்தத் திகதியை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் பாரியதொரு எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுப்போம். நாம் யார் என்பதையும் எமது பலம் என்னவென்பதையும் அன்றைய நாளில் நிரூபிப்போம் - என்றார். (அ)

# பொதுஜன பெரமுன கட்சியில் போட்டியிடப் பலரும் ஆர்வம்!

## சாகர காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமது கட்சியில் போட்டியிட பலர் ஆர்வம் காட்டி வருவதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன் றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரி வித்தார்.

நாட்டு மக்கள் பொய்களுக்கு ஏமாறமாட்டார்கள் என்பது தற்பொழுது தெளிவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாத வர்கள் மட்டுமே இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மொட்டு கட்சியின் சார்பில் வேட்பாளராக போட்டியிட உள்ளனர் என அவர் கூறினார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.03.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஈழத்தமிழ் மக்கள் விரட்டியடிக்க மாட்டார்களா?

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் - "வாக்களித்தவர்களாலேயே விரட்டியடிக்கப்படுவீர்கள்" என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறார். சிங்கள மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தையும் அகற்றலாம் - அவ்வாறு நிகழ்ந்தால் இலங்கை அரசியலில் அது ஆச்சரியமானதல்ல. ஏனெனில், 69 இலட்சம் வாக்குகளை வழங்கித் தங்களின் தானைத் தலைவர் என்று கொண்டாடிய கோட்டாபய ராஜபக்ஷவை வாக்களித்த மக்கள்தான் அதிகாரத்திலிருந்து அகற்றினார்கள். கோட்டாபய மயக்கத்திலிருந்த சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதரவுடன்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரிய பெரும்பான்மை வெற்றியைப் பெற்றிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதை அவர்கள் உணர்ந்தால் அல்லது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்பாராதவாறு நெருக்கடியை சந்தித்து கோட்டாபய ராஜபக்ஷ போன்று நெருக்கடி நிலைமையை சமாளிக்க முடியாமல் திணறினால் - தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் நிச்சயம் வீழ்ச்சியை சந்திக்கும்தான். அதில் சந்தேகம் கொள்ள ஒன்றுமில்லை.

ஆனால், இங்கு கேட்கப்பட வேண்டிய கேள்வியோ வேறு. அதாவது, இலங்கை தமிழ் அரசு கட்சி 1949இல் உருவாக்கப்பட்டது. கட்சியின் இன்னொரு பெயர் சமஷ்டி கட்சி. கடந்த 75 ஆண்டுகளாக சமஷ்டியைப் பெற்றுத் தருவதாகக் கூறி இறுதியில் இருந்ததையும் தக்கவைக்க முடியாமல் தோல்வியுற்றிருக்கும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொய் வாக்குறுதிகள் தொடர்பில் ஈழத் தமிழினம் ஆவேசம் கொண்டு எப்போது இவர்களை விரட்டியடிப்பார்கள்? - தாங்களும் அரசியல் விழிப்புணர்வு பெற்ற மக்கள் கூட்டம்தான் - என்பதை ஈழத் தமிழர்கள் எப்போது நிரூபிப்பார்கள்?

சிங்கள மக்கள் காலத்துக்குக் காலம் அதனை நிரூபித்திருக்கின்றனர் - இனியும் நிரூபிப்பார்கள் என்று நம்பலாம். ஆனால், நமது ஈழத் தமிழினமோ - குறிப்பாக யாழ்ப்பாண சமூகம் தங்களைப் படித்த சமூகமென்று பெருமை கொண்ட சமூகம் - சிங்களவர்களை "மோட்டுச் சிங்களவர்கள்" என்று கூறி மகிழ்ந்த வரலாற்றைக் கொண்டிருக்கும் சமூகம் - இவ்வாறானதொரு சமூகத்தை எவ்வாறு தமிழ் அரசியல்வாதிகள் வெற்றிகரமாக 75 வருடங்களாக ஏமாற்றி வந்திருக்கின்றனர் - இப்போதுமே ஏமாற்றலாம் என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

போக முடியாத ஊருக்கு வழிசொல்வதைத் தங்களின் வித்துவமாகக் காண்பித்துக் கொண்டிருக்கும் - வாக்களிக்கும் மக்களை எல்லாக் காலத்திலும் வெற்றிகரமாக ஏமாற்ற முடியுமென்பதில் உறுதி கொண்டிருக்கும் ஈழத் தமிழ் அரசியல்வாதிகளை எப்போதுதான் ஈழத் தமிழினம் விரட்டியடிக்கும்? அந்தக் காலம் வருமா?

கடந்த பதினைந்து வருடங்களாக எந்தவொரு முன்னேற்றத்தையும் காண்பிக்காத தமிழ் அரசியல்வாதிகளோ தொடர்ந்தும் கதிரையைத் தங்கள் வசம் பேணிப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருகின்றனர். இவர்கள் உண்மையிலேயே அரசியல் நேர்மையுள்ளவர்களாக இருந்திருந்தால் தங்களின் தோல்விக்குப் பொறுப்பேற்று அரசியலை புதிய தலைமுறையிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறியிருக்க வேண்டும். ஆனால், தங்களின் தோல்விக்கு புதிய பொய்களைக் கண்டுபிடிப்பதிலேயே கவனமாக இருக்கின்றனர். இதற்கு என்ன காரணம்?

ஒரேயொரு காரணம்தான். அதாவது, ஈழத் தமிழினம் தங்களை விரட்டியடிக்காது - அதற்கான அறிவாற்றல் அவர்களுக்கில்லை என்றே ஈழ அரசியல்வாதிகள் ஆணித்தரமாக நம்புகின்றனர். இந்த நம்பிக்கையை ஈழத் தமிழினம் கேள்விக்குள்ளாக்காத வரையில் அரசியலில் மாற்றம் என்பது முயல் கொம்புதான்.

# செயற்கை அவயவங்கள் பொருத்த 20 பேர் தமிழ்நாட்டுக்கு பயணம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 06*

செயற்கை அவயவங்களை பொருத்துவதற்காக வடக்கு, கிழக்கை சேர்ந்த 20 பயனாளிகள் நேற்றைய தினம் தமிழ்நாட்டுக்கு பயணமாகினர்.

யாழ். பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்படும் செயல்திட்டத்தின் கீழேயே இவர்கள் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கே. செல்வகுமாரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயல்திட்டத்துக்கு வெளிநாட்டு அமைப்புகள் நிதியுதவி வழங்கி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெண்ணின் சங்கிலி பறித்த ஒருவர் கைது!

*வடமராட்சி, மார்ச் 06*

வல்லைவெளியில் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அபகரித்த சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை வல்லைவெளிப் பகுதியில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றனர்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதேசயம், சாவகச்சேரியில் மோட்டார் சைக்கிள் மற்றும் நகையுடன் ஒருவர் நேற்றைய தினமே கைது செய்யப்பட்டார். மற்றையவரை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரை இன்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-02)

# கிளிநொச்சியில் வாள்வெட்டு நால்வர் மருத்துவமனையில்!

*கிளிநொச்சி, மார்ச் 06*

வாள்வெட்டில் காயமடைந்த நிலையில் நால்வர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தருமபுரம் - கட்டைக்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த நால்வர் தருமபுரம் பிரேதச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## மெய்வன்மை போட்டி

*கிளிநொச்சி, மார்ச் 06*

முழங்காவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ப. ஆனந்தராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் பூநகரி பிரதேச செயலாளர் த. அகிலன் பிரதம விருந்தினராகவும் கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனை ஆசிரியர் ஆலோசகர் க. குமரன் சிறப்பு விருந்தினராகவும் முல்லைத்தீவு நெத்தலியாறு அ. த. க. பாடசாலை ப. துஷ்யந்தன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## ஆழியவளை சி. சி. த. கவில் தூய இலங்கை வேலைத்திட்டம்!

*வடமராட்சி, மார்ச் 06*

வடமராட்சி கிழக்கு ஆழியவளை சி. சி. த. க வித்தியாலயத்தில் நேற்று புதன்கிழமை தூய இலங்கை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.




பாடசாலை அதிபர் தலைமையில் மங்கல விளகேற்றலுடன் ஆரம்பமான இந்த வேலைத் திட்டத்தில் பாடசாலை சுற்றுச் சூழல் தூய்மைப் படுத்தப்பட்டது.

இதன்போது, இராணுவத்தின் 10ஆவது விஜயபாகு படைப் பிரிவு உடைவுற்ற கதிரை, மேசைகளை மீளாக்கம் செய்து பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கியது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்ட செயலகத்தில் தொழில் சந்தை நேற்று நடந்தது!

## ஆர்வத்துடன் இளையோர் பங்கேற்பு



வவுனியா, மார்ச் 06

மனிதவலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து நேற்று புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் தொழில் சந்தையை நடத்தின.

வவுனியா மாவட்ட செயலாளர் சரத் சந்திர, உதவி மாவட்ட செயலாளர் சாபர்ஜா, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) நா. கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் காஞ்சனா குமார ஆகியோர் விருந்தினர்களாக இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 30இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இதில் பங்கேற்றன.

அத்துடன், நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புத் தேடி இந்த தொழிற்சந்தையில் பங்கேற்றிருந்தனர். (ஐ-10)

# வாழைக்குலை சங்க தராசுக்கு 'சீல்' வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 06

நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் வாழைக்குலை நிறுத்தல் கருவி (தராசு) ஒன்றுக்கு மாவட்ட நிறுத்தல் அளவுகள் கண்காணிப்பு அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

வாழைக்குலை உற்பத்தியாளர் சங்கம் தொடர்பில் விவசாயிகள் முன்வைத்த முறைப்பாடுகளை அடுத்து யாழ். மாவட்ட செயலகத்தின் நிறுத்தல் கருவி அதிகாரிகள் அங்கு சென்று தராசுகளை பரிசோதித்தனர்.

இதன்போது, பல கருவிகள் முத்திரையிடப்படாமல் பயன்படுத்தப்பட்டமை தெரிய வந்தது. அத்துடன், ஒரு தராசுக்கு சீல் வைக்கப்பட்டது. (ஐ-05)

# போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இருவர் கைது

வவுனியா, மார்ச் 06

188 போதை மாத்திரைகளுடன் இரு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா - வேப்பங்குளத்தில் மாணவர்களுக்கு போதை மாத்திரைகள் விற்கப்படுகின்றன என்று கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்றுமுன்தினம் பொலிஸார் விசேட சுற்றிவளைப்பை நடத்தினர்.

இதன்போது 188 போதை மாத்திரைகளுடன் 22, 23 வயது இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# மாத்திரைகளை உட்கொண்ட குழந்தை மரணம்!

முல்லைத்தீவு, மார்ச் 06

பாதுகாப்பற்ற முறையில் வைத்திருந்த மாத்திரைகளை உட்கொண்ட குழந்தை உயிரிழந்தது.

முல்லைத்தீவு - மாங்குளம் - கல்குவாரி பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்ட மாத் திரைகளை குழந்தை உட்கொண் டுள்ளது. மயங்கிக் கிடந்த குழந்தையை பெற்றோர் மாங்குளம் பிரதேச மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச் சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு குழந்தை மாற்றப்பட்டது. எனினும், குழந்தை உயிரிழந்தது. (ஐ)

யாழ். போதனா மருத்துவமனையில்

# மருத்துவர்களின் மட்டுப்படுத்தப்பட்ட பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், மார்ச் 06

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மட்டுப்படுத்தப்பட்டளவில் மேற்கொள்ளப்பட்ட பணிப் புறக்கணிப்பை நேற்று முன்தி னம் மாலை முதல் அரச மருத் துவ அதிகாரிகள் சங்கம் இடைநிறுத்தியுள்ளது.

மருத்துவமனை நிர்வாகத்துக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டே இந்தப் பணிப் புறக்கணிப்பு இடைநிறுத்தப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனை நிர்வாகத்திடம் 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சிகிச்சைகளை இடைநிறுத்தி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் கடந்த வியாழக்கிழமை முதல் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் அரச வைத்திய அதிகாரிகளின் தாய்ச் சங்கத்துடன் யாழ். போதனா மருத்துவமனை கிளைச் சங்கம் கலந்துரையாடிய பின்னர், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் போராட்டத்தை தொடர்ந்தது.

இதன்போது அவசரமற்ற சத்திர சிகிச்சைகள் மருத்துவர்களால் மேற்கொள்ளப்படவில்லை.

தொடர்ச்சியான பேச்சுகளை தொடர்ந்து நேற்றுமுன்தினம் மாலை முதல் ஒரு வார கால அவகாசம் வழங் கப்பட்டு பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது.

விபத்து அதிதீவிர சிகிச்சை பிரிவில் மருத்துவர் மற்றும் தாதி உத்தியோகத்தர் இடையே ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியே மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (ஐ)




**மேடம்**
கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நட்பு வட்டம் விரியும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் இருக்கும். அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும்.

**கடகம்**
கல்யாண முயற்சிகள் பலிதமாகும். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். சிறப்பான நாள்.

**சிம்மம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடிவருவார். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கன்னி**
பணப்புழக்கம் கணிசமாக உயரும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில சமயங்களில் விரக்தியாக பேசுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக்கொள்ளுங்கள். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும்.

**மகரம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். புதுமை படைக்கும் நாள்.

**கும்பம்**
புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலைத் தீர்ப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். புதுவேலை கிடைக்கும்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சுங்கத் திணைக்களத்தில் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பு!

### ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

கொழும்பு, மார்ச் 06

**காலத்துக்கு ஏற்ற நிறுவன கட்டமைப்பை உருவாக்க இலங்கை சுங்கத்துக்குள் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

2025 வரவு-செலவுத் திட்டம் மற்றும் நிறுவன மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கை சுங்கத்தின் உயர் அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

சுங்கத்தின் செயற்திறனின்மை, மோசடி, ஊழல் மற்றும் பொதுமக்களிடையே காணப்படும் அதிருப்தி குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதற்கு தீர்வாக, திணைக்களச் செயல்பாடுகளை விரைவுபடுத்த புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சேவைகளை சிறப்பாக வழங்குவதற்கான திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

திணைக்களத்திற்கான புதிய மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கை சுங்கத்தில் காணப்படும் முறைகேடுகளை அகற்ற கடுமையான சட்டங்களை வகுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மனிதவள முகாமைத்துவம், புதிய ஆட்சேர்ப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியை துரிதப்படுத்துவது குறித்தும் இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

கடந்த ஆண்டு சுங்கம் அடைந்த வருமான இலக்குகளை ஜனாதிபதி பாராட்டியதுடன், இந்த வருட வருமான இலக்கை அடைய சுங்கத் திணைக்களம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அப்போன்சு, இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் பி.பி.எஸ்.சி. நோனிஸ் உட்பட இலங்கை சுங்கத்தின் உயர் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ)

## சுற்றுலாத்துறையில் உள்ளோருக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 06

சுற்றுலாத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு சமூக நலத்திட்டமும் ஓய்வூதியத் திட்டமும் இந்த வருடம் அறிமுகப்படுத்தப்படும் என சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் சமிந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போது, பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

சுற்றுலா வணிகத்தை மேம்படுத்த, ஊக்குவிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர், இதுவரை 100 சுற்றுலா தலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள தாகவும், தேவையான வசதிகளை வழங்க ஒவ்வொரு தலத்திற்கும் 10 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் கூறினார். (அ)

## உயிரியல் தொழில்நுட்ப பாடத்தின் செயன்முறை பரீட்சை 8 ஆம் திகதி!


கொழும்பு, மார்ச் 06

கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தின் உயிரியல் தொழில்நுட்ப பாடத்தின் செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

8ஆம் திகதி ஆரம்பமாகும் இந்த பரீட்சை 10 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

நாடு முழுவதும் 75 பரீட்சை மையங்களில் இந்த பரீட்சை நடைபெறவுள்ளது. (அ)

# திரைப்படமாகிறது மகிந்தவின் வரலாறு



கொழும்பு, மார்ச் 06

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சுயசரிதை ஒரு வாழ்க்கை வரலாற்றுப் படமாக தயாரிக்கப்பட உள்ளது.

இது தொடர்பான திட்டங்கள் நடைபெற்று வருவதாக முன்னாள் ஜனாதிபதியின் மகன், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உறுதிப்படுத்தினார்.

ஊடகங்களிடம் பேசிய அவர், வாழ்க்கை வரலாற்றைத் தவிர, ஒரு குறும்படமும் வெளியிடப்படும் என்று கூறினார்.

இந்த வாழ்க்கை வரலாற்று படத்தில் நடிப்பீர்களா என்று கேட்டபோது, தனது குழந்தைப் பருவ விவரங்கள் இதில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், நடிக்க விருப்பமுள்ள எவரும் அந்த வேடத்தில் நடிக்கலாம் என்றும் நாமல் கூறினார். (அ)

# சம்பள விடயத்தில் அரசாங்கத்தின் உறுதிமொழியை நம்பமுடியவில்லை!

### ரவி குமுதேஷ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

சம்பள விடயத்தில் அரசாங்கத்தின் உறுதிமொழிகளை நம்பமுடியாமல் உள்ளதாக நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் வைத்தியத்துறை சார்ந்தோருக்கு மாத்திரம் மேலதிக கொடுப்பனவுகள் உள்ளிட்டவை நிறுத்தப்பட்டுள்ளன.

அமைச்சர்களான நலிந்த ஜயதிஸ்ஸவும் வசந்த சமரசிங்கவும் ஏதும் அறியாத சிறு குழந்தைகளைப் போல பாராளுமன்றத்தில் பேசுகிறார்கள்.

தொழிற்சங்கங்களுடனான சந்திப்பின்போது பிரச்சினையை தீர்ப்பதாக உறுதியளிக்கிறார்கள். தமக்கு நெருக்கமான தொழிற்சங்கங்களை அழைத்து அவர்களுடன் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டு பிரச்சினைகள் எதுவும் இல்லாதது போல வெளிக்காட்ட முயற்சிக்கிறார்கள்.

உண்மையில் அரச ஊழியர்களின் சம்பள விடயத்தில் அரசாங்கத்தின் உறுதிமொழிகளை நம்ப முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

அமைச்சர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். அரசியல் நோக்கம் கருதி செயற்படக் கூடாது. இதனை நாம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடமும் வலியுறுத்த விரும்புகிறோம்-என்றார்.

# தென்னக்கோனைக் கைது செய்ய புலனாய்வுப்பிரிவு விசேட சோதனை

கொழும்பு, மார்ச் 06

கட்டாய விடுமுறையில் உள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்ய பொலிஸார் புலனாய்வுப் பிரிவுகளை ஈடுபடுத்தியுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பொலிஸார் முன்னாள் பொலிஸ் மா அதிபரைத் தேடி சோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும், அவர் விரைவில் கைது செய்யப்படுவார் என்று அரசாங்கம் நம்புவதாகவும் அமைச்சர் கூறினார். முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்வதில் ஏற்பட்ட தாமதம் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# சந்தையில் மனித பாவனைக்கு உதவாத தேங்காய் எண்ணெய்!

கொழும்பு, மார்ச் 06

உள்ளூர் சந்தையில் மனித பாவனைக்கு உதவாத தேங்காய் எண்ணெய் விற்பனை செய்யப்படுவதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி சபையில் தேங்காய் எண்ணெய் குறித்து தெரிவித்த விடயத்துக்கு விளக்கமளிக்கையிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயைப் பெற்று உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வதில் இறக்குமதியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்" என பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கு வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க, சில தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்கள் குறிப்பிட்டளவு வருமானத்தை ஈட்டிய பின்னர் 11 மாதங்களில் செயல்பாட்டை நிறுத்தியுள்ளனர். இவ்வாறானவர்களை தண்டிக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் திருத்தப்படும். எனவே, மோசடிகளைத் தடுக்க உறுதியான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் கொண்டுவரப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

## பணிநீக்கம் செய்யப்பட்ட கான்ஸ்டபிள் போலி அடையாள அட்டையுடன் கைது!

கொழும்பு, மார்ச் 06

சிலாபம் - மாரவில பகுதியில், பணிநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், போலியான பொலிஸ் அடையாள அட்டையை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் உந்துருளியைச் செலுத்திச் சென்றதாகக் கூறப்படும் குறித்த நபரை நிறுத்தி சிலாபம் போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது, தாமும் பொலிஸைச் சேர்ந்தவர் எனக் கூறிய குறித்த நபர் அடையாள அட்டையொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

குறித்த அடையாள அட்டை தொடர்பில் சந்தேகம் எழுந்தமையினால் தொடர்ந்தும் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகநபர் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றியபோது சேவையிலிருந்து விலகுமாறு பணிக்கப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டும்

## வலியுறுத்துகிறது நாணய நிதியம்

கொழும்பு, மார்ச் 06

**இலங்கை மின்சார சபை, கடந்த ஜனவரி மாதம் நாட்டின் மின்சாரக் கட்டணத்தை திருத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த திருத்தத்துடன் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான செலவு, புதிய கட்டணத்தால் ஈடுகட்டப்படாது என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதானி பீற்றர் பிரூவர் தெரிவித்தார்.**

எதிர்காலத்தைப் பார்க்கும் போது, புதிய கட்டணத்தின் கீழ் இலங்கை மின்சார சபை எதிர்கொள்ளும் இழப்புகளைத் தடுக்க முடியாது என்பது தெளிவாகிறது என்றும் அவர் கூறினார்.

இதன் விளைவாக, இலங்கை மின்சார சபையின் கடன்கள் மீண்டும் குவியும் அபாயம் இருப்பதாகவும், அதனால் இலங்கை மின்சார சபை மீண்டும் அரசாங்கத்திற்கு சுமையாக மாறும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை மின்சார சபை அரசாங்கத்துக்கு எவ்வளவு சுமையாக இருக்கும் என்பது அனைவருக்கும் அனுபவம் உள்ளதால், வரவிருக்கும் மின்சாரக் கட்டண திருத்தத்தில் செலவு ஈடுகட்டும் மின்சார விலையை மீண்டும் நிர்ணயிப்பது அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இழப்புகளை ஏற்படுத்தாத வகையில் விலைகளை நிர்ணயிப்பதற்கான தானியங்கி வழிமுறைகள் ஏற்கனவே உள்ளதாகவும், அவை செயல்பட அனுமதிக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

# சாதாரண தரப் பரீட்சை அனுமதி அட்டை தபாலில்!



கொழும்பு, மார்ச் 06

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரர்களின் பரீட்சை அனுமதி அட்டைகள் அதிபர்களுக்கும் தனியார் விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் அவர்களின் முகவரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியேற்பட்டால் அதனை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக நிகழ்நிலை ஊடாக சமர்ப்பிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

இதற்கான வசதியை www.doenets.lk என்ற இணையத்தளத்துக்கு பிரவேசிப்பதன் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு அவர்களின் பரீட்சை அனுமதி அட்டைகளை விரைவாக வழங்குமாறு அதிபர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை 3663 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள நிலையில் குறித்த பரீட்சைக்கு 474,147 பரீட்சார்த்திகள் தகுதி பெற்றுள்ளனர். (அ)

# தந்தை தாக்கி மகன் காயம்!

## பலாங்கொடையில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 06

இரத்தினபுரி, பலாங்கொடை பிரதேசத்தில் தந்தையால் தாக்கப்பட்டு மகன் காயமடைந்துள்ளார் என பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 23 வயதுடைய மகனே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

சம்பவத்தன்று, மகன் வீட்டினுள் பாட வேலைத்திட்டங்களில் ஈடுபட்டிருந்தவேளை சந்தேக நபரான தந்தை தனது மகனின் தலையில் பொல்லால் தாக்கியுள்ளார்.

பின்னர், சந்தேக நபரான தந்தை தனது உயிரை மாய்த்துக்கொள்ள முயன்று சுகயீனமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, தந்தையும் மகனும் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# செவ்வந்தி பற்றி தகவல் கூறின் 1.2 மில்லியன் ரூபா பணப்பரிசு!

கொழும்பு, மார்ச் 06

பாதாள உலகக் குழுத் தலைவர் "கணேமுல்ல சஞ்சீவ"வின் கொலையுடன் தொடர்புடைய காணாமல்போன பெண் சந்தேக நபரைக் கைது செய்வதற்கு உதவியான தகவல்களுக்கு அறிவிக்கப்பட்ட வெகுமதியை இலங்கை பொலிஸ் அதிகரித்துள்ளது.

அதன்படி, பொலிஸ் தற்போது அந்தத் தொகையை முந்தைய ரூ.1 மில்லியனில் இருந்து ரூ.1.2 மில்லியனாக அதிகரித்துள்ளது.

நீர்கொழும்பு, கட்டுவெல்ல கமவைச் சேர்ந்த 25 வயதான இஷாரா செவ்வந்தி என அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர், பெப்ரவரி மாதம் கொழும்பு நீதிமன்ற வளாகத்துக்குள் சஞ்சீவவைக் கொன்ற துப்பாக்கிதாரிக்கு உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார், எனவே அவரைக் கண்டுபிடிக்க பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பாக செவ்வந்தியின் தம்பி மற்றும் தாயார் உட்பட மேலும் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தகவல் தெரிவிப்பவர்களின் ரகசியத்தன்மை பாதுகாக்கப்படுவதை பொலிஸ் திணைக்களம் உறுதி செய்துள்ளது. மேலும், தகவல் தெரிந்தவர்கள் 071-8591727 அல்லது 071-8591735 என்ற அவசர அழைப்புகள் மூலம் அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (அ)

# ஹோட்டல் உரிமையாளர் மீது தாக்குதல் பொலிஸ் பரிசோதகர் பணி இடைநீக்கம்

கொழும்பு, மார்ச் 06

மொனராகலை, வெல்லவாய பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரை போத்தலால் தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் பொலிஸ் பரிசோதகர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக மொனராகலை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

புத்தல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரே பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக, பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் பரிசோதகரின் விடுதிக்கு அருகில் வைத்து இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவாய பொலிஸ் நிலையத்துக்கு கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேக நபரான பொலிஸ் பரிசோதகர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் தற்போது பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போதகர் ஜெரோமுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடை நீக்கம்!

கொழும்பு, மார்ச் 06

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடையை முழுமையாக நீக்கி கோட்டை நீதவான் நிலுபுலி இலங்காபுர உத்தரவிட்டுள்ளார்.

இனங்களுக்கு இடையே மத வெறுப்பைத் தூண்டும் வகையில் பிரசங்கம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த ஜெரோம் பெர்னாண்டோவுக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

வெளிநாடுகளில் நடைபெறும் மத நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்குத் தடையாக உள்ளதாகத் தெரிவித்து பயணத் தடையை நீக்க உத்தரவிடக் கோரி அவரது சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடையை முழுமையாக நீக்கி உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# ரூ.52 மில்லியன் பெறுமதியான கஞ்சா கட்டுநாயக்கவில் மீட்பு!

கொழும்பு, மார்ச் 06

5.2 கிலோ கிராம் எடையுள்ள கஞ்சாவை கடத்த முற்பட்ட நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப்பொருளின் பெறுமதியானது 52 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

34 வயதான சந்தேக நபர் நேற்று அதிகாலை 01.00 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

அவர் தனது பயணப் பொதிகளுக்குள் இருந்த உணவுப் பொட்டலங்களில் போதைப் பொருளை மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணையை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தற்போதைய கழிவு கொடுப்பனவின் கீழ் 2 வாரங்களுக்கு எரிபொருள் விநியோகம்

## கனியவள கூட்டுத்தாபனம் இணக்கம்

கொழும்பு, மார்ச் 06

எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தினருக்கும், இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று தினம் நடைபெற்றது.

குறித்த இந்த கலந்துரையாடல் கனியவள கூட்டுத்தாபன தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ, தற்போதைய கழிவு கொடுப்பனவு நடைமுறையின் கீழ் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வதற்கு கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் இணங்கியதாகக் குறிப்பிட்டார்.

குறித்த இரண்டு வாரங்களில் புதிய கழிவு கொடுப்பனவுச் சூத்திரத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்வதற்குப் பரிந்துரை முன்வைக்கப்படுமாயின் அது தொடர்பாக ஆராயப்படும் என கனியவள கூட்டுத்தாபன தலைவர் குறிப்பிட்டதாகவும் எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் அரசுக்கு சவால்மிக்கது

**ரோஹித அபேகுணவர்தன**

கொழும்பு, மார்ச் 06

**அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரித்துள்ளோம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. இருந்ததும் இல்லாமல் போய்விட்டது என்று அரச சேவையாளர்கள் குறிப்பிடுகிறார்கள். யார் குறிப்பிடுவது உண்மை. புத்தாண்டுக்கு முன்னர் உண்மையை தெரிந்துக் கொள்ள முடியும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அரசாங்கத்துக்கு சவால்மிக்கது என புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் பொது நிர்வாக,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் மார்ச் 17 முதல் 20 ஆம் திகதி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இருப்பினும் வாக்கெடுப்பு திகதி அறிவிக்கப்படவில்லை. வேட்புமனுத் தாக்கல் நிறைவுபெறும் தினத்தன்று வாக்கெடுப்பு திகதியை அறிவிப்பதாக குறிப்பிடப் பட்டுள்ளது. ஆகவே தாமதப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. விரைவாக திகதியை அறிவியுங்கள்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அரசாங்கத்தின் மீதான மக்களின் நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தும். தேசிய மக்கள் சக்தி இடம்பெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலில் அமோக வெற்றிப் பெற்று ஆட்சியமைத்துள்ளது. ஆகவே



இந்த தேர்தல் அரசாங்கத்துக்கு மிகவும் முக்கியமானது.

அரசாங்கத்தின் குறை, நிறைகளை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். பேசுவதை குறைத்து விட்டுச் செயற்படுங்கள் என்று அரசாங்கத்திடம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். எதிர்வரும் 15 ஆம் திகதி காட்டு விலங்குகளை கணக்கெடுப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டது. அரச அதிகாரிகள் செய்ய வேண்டிய பணிகளை அரசியல்வாதிகள் செய்தால் பாரிய நெருக் கடிகள் ஏற்படும்.

அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரித்துள்ளோம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் சம்பளம் அதிகரிக்கப்ப டவில்லை.இருந்ததும் இல்லாமல் போய்விட்டது என்று அரச சேவையாளர்கள் குறிப்பிடுகிறார்கள். யார் குறிப்பிடுவது உண்மை. புத்தாண்டுக்கு முன்னர் உண்மையை தெரிந்துக் கொள்ள முடியும்- என்றார். (அ)

# போலி இலக்கத் தகடு கொண்ட வாகனங்களுடன் மூவர் கைது!

கொழும்பு, மார்ச் 06

சுங்கவரி செலுத்தாமல் கொண்டுவரப்பட்டு, போலி இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்ட வாகனங்களை வைத்திருந்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் பெல்மடுல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சுங்கவரி செலுத்தாமல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு, போலி இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்ட ஜீப் வாகனம் ஒன்றும், மோட்டார் வாகனம் ஒன்றும் பெல்மடுல்ல பொலிஸ் நிலையப் பிரிவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டன.

பெல்மடுல்ல பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, பெல்மடுல்ல பொலிஸ் அந்த இரு வாகனங்களையும் காவலில் எடுத்து விசாரணைகளை ஆரம்பித்தது.

அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது நேற்று மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது, மேற்குறிப்பிட்ட வாகனங்களை வைத்திருந்தமை, சுங்கவரி செலுத்தாமல் இலங்கைக்கு கொண்டுவந்தமை மற்றும் போலி இலக்கத்தகடுகள்பொருத்தி பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 49, 59 மற்றும் 61 வயதுடையவர்கள் எனவும், அவர்கள் எம்பிலிபிட்டிய மற்றும் மாமடல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் நேற்று பெல்மடுல்ல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (அ)

# தாய்லாந்து பிரஜை கைது!

கொழும்பு, மார்ச் 06

கட்டுநாயக்க விமான நிலையத்தில், 5.2 கிலோ குஷ் போதைப் பொருளுடன் தாய்லாந்துப் பிரஜை ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

விமான நிலைய சுங்க அதிகாரிகளால் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# வீதிப் பாதுகாப்பை மேம்படுத்த உயர் தொழில்நுட்ப வேகக்கருவி!



கொழும்பு, மார்ச் 06

வீதிப் பாதுகாப்பை மேம்படுத்தவும் விபத்துகளைக் குறைக்கவும் இலங்கை பொலிஸ்துறை உயர் தொழில்நுட்ப வேகத் கருவிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இந்த சாதனங்கள், இரவில் கூட 1.2 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து வாகனங்களைக் கண்டறியும் திறன் கொண்டவை.

சாதனத்தில் பதிவு செய்யப்படும் வீடியோ காட்சிகள் நீதிமன்றத்தில் ஆதாரமாக பயன்படுத்தப்படும்.

இதனால் அதிகாரிகள் போக்குவரத்து விதிமீறல்களுக்கான தெளிவான ஆதாரங்களை முன்வைக்க முடியும்.

இதனிடையே, போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் சாலை பாதுகாப்புப் பணிப்பாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மனோஜ் ரணவாலா, வீதி விபத்துகள் குறித்த புள்ளி விவரங்களைப் பகிர்ந்து கொண்டார்:

- 2020 முதல் 2024 வரை 11,617 வீதி விபத்துகள்
- 33,259 கடுமையான விபத்துக்கள் பதிவு
- 12,322 இறப்புகள் பதிவு

இந்த ஆண்டில் 2025 பெப்ரவரி 26 நிலவரப்படி, வீதி விபத்துகளில் 341 பேர் இறந்துள்ளனர்.

விபத்துகளுக்கு வேகம் ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

புதிய வேக கருவிகள் விபத்துகளைக் குறைப்பதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என்றும் அவர் கூறினார்.

இந்த சாதனங்களில் இரட்டை கமெராக்கள் மற்றும் இரவு பார்வைத் தொழில்நுட்பம் உள்ளன. அவை சாரதியின் முகம், வாகன எண் மற்றும் வேகத்தை நிகழ்நேரத்தில் படம்பிடிக்கின்றன.

நாடு முழுவதும் இந்த சாதனங்களுடன் 30 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்

இந்த சாதனம் ஒவ்வொன்றும் 3.3 மில்லியன் ரூபா பெறுதியானவை என்று அவர் குறிப்பிட்டார். (அ)

# வடக்கில் நிர்மாணப் பணிகள் ஊடாக இனவாதம் தலைதூக்க இடமளியோம்!

**அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ**

கொழும்பு, மார்ச். 06

வடக்கு மாகாணத்தில் ஏதாவது ஒரு காணியை விடுவிப்பதன் ஊடாகவோ, அல்லது ஏதாவது ஒரு காணியில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதன் ஊடாகவோ நாட்டில் மீண்டும் இனவாதமும் மதவாதமும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் தையிட்டி விகாரை காணி தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, அந்த பகுதியில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் அந்த மக்களின் காணியை விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமெனக் குறிப்பிட்டார்.

அந்தப் பணிகள் முறையாக இடம்பெறும்.

அதே போன்று அங்கு ஏதாவது ஒரு காணியை விடுவிப்பதன் ஊடாகவோ, அல்லது ஏதாவது ஒரு காணியில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதன் ஊடாகவோ நாட்டில் மீண்டும் இனவாதமும் மதவாதமும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

இனங்களுக்கு இடையே சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கே அரசாங்கத்துக்குப் பெரும்பான்மையான மக்கள் ஆணை கிடைத்துள்ளது.

இதனடிப்படையிலேயே இந்த முறை பாதீட்டில் அதிக தொகை வடக்குக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் விசேட கவனமும் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மீண்டும் மதவாதத்தையும் இனவாதத்தையும் உருவாக்க இடமளிக்காமல் அனைவரும் இலங்கையர்கள் என்ற வகையில் செயற்படுவதே எமது இலக்காகும்.

இதனடிப்படையிலேயே, இலங்கையர் தினமொன்றை எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பரில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, நாட்டின் அமைதிக்கு இடையூறு ஏற்படுத்தும் எந்த தரப்பினருக்கும் அரசாங்கம் பதிலளிக்கும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (அ)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 87 இலட்சம் சிகரெட்டுக்கள் அழிப்பு!

கொழும்பு, மார்ச் 06

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்ப நிலையில், இலங்கை சுங்கத் திணைக்களத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட சுமார் 87 இலட்சத்து 84 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுக்கள் அழிக்கப்பட்டன. கொழும்பில் உள்ள அமைந்துள்ள இலங்கை புகையிலை நிறுவன வளாகத்தில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கடல் மார்க்கமாக 2018 முதல் 2022 ஆம் ஆண்டுவரை மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வர முயன்ற, மூன்று கொள்கலன்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 87 இலட்சத்து 84 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுக்கள் இலங்கை சுங்கத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டன. குறித்த சிகரெட்டுக்கள் இலங்கை புகையிலை நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் சுங்கத் திணைக்களத்தின் அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டதுடன் அவை குறித்த நிறுவனத்தால் அழிக்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுக்களின் சந்தை பெறுமதி 1.2 பில்லியன் ரூபா எனச் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கணக்கிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பிரதேச செயலக விவகாரம் அழுத்திக் கதைப்பதால் தீர்க்கமுடியாது

## ரவூப் ஹக்கீம் எம். பி. சொல்கிறார்



கொழும்பு, மார்ச் 06

**கல்முனை பிரதேச செயலக விவகாரத்தை பாராளுமன்றத்தில் அழுத்திக் கதைப்பதால் மட்டும் தீர்த்துவிட முடியாது இவ்வாறு சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.**

நேற்று முன்தினம் கல்முனை பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் கோடீஸ்வரன் எம். பி. பாராளுமன்றில் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்தே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


மேலும், "கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களும் பலரும் இதுதொடர்பாக சபையிலும் சபைக்கு வெளியிலும் பல தடவைகள் பேசியுள்ளனர்.

இந்த பிரதேச செயலகம் விவகாரத்தில் 90களில் அமைச்சரவை அனுமதி கொடுக்கப்பட்டது. ஏன் இதுவரை செய்யப்படவில்லை.

35 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்த விடாமல் அரசியல்வாதிகள் தலையீடு செய்கிறார்கள். அதனால் இது இடம்பெறுவதில்லை என்றெல்லாம் குறை கூறப்படுகிறது. உண்மைக்கு புறம்பான இந்த விடயம் தொடர்பில் இதன் உண்மை தன்மை தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் தமிழ் அரசுக் கட்சியினரும் பல தடவைகள் எங்களுக்குள் கலந்துரையாடி தீர்த்துக்கொள்ள முயற்சித்திருக்கிறோம் - என்றார். (ஐ)

# சித்திர வேலாயுத சுவாமி ஆலய இராஜகோபுர பணி மீள ஆரம்பம்!



காரைதீவு, மார்ச் 06

கிழக்கிலங்கையின் வரலாற்று பிரசித்தி பெற்ற திருக் கோவில் சிறீ சித்திர வேலயுதசுவாமி ஆலயத்தில் பல வருடங்களாக தடைபட்டிருந்த இராஜ கோபுரத்தின் முதலிரு தளங்கள் பூர்த்தி அடைந்துள்ளன. பொறியியலாளர் சு. சசிகு மாரின் நிதி அன்பளிப்பில் முதல் இரு தளங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

நவ தளங்களுடன் 108 அடி உயரத்தில் அமைக்கப்படவிருந்த இந்த இராஜகோபுரம் 33 அடி உயரம் அமைக்கப்பட்டிருந்த நிலையில் தடைப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோறளைபற்று மத்தியின் எல்லைகளை நிர்ணயியுங்கள்!

## சபையில் ஹிஸ்புல்லா

கொழும்பு, மார்ச் 06

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகத்தின் எல்லைகள் இதுவரையில் நிர்ணயிக்கப்படவில்லை. பானம்பலன் ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கு அமைவாக இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றிய அவர்,

மட்டக்களப்பில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் எல்லைகள் இதுவரையில் நிர்ணயிக்கப்படவில்லை. பானம்பலன என்ற ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் சிபாரிசுகளை முன்வைத்திருந்தது. இந்த சிபாரிசுகளின் அடிப்படையில் நாட்டின் பல்வேறுப்பட்ட பகுதிகளின் பிரச்னைகள் தீர்க்கப்பட்ட நிலையிலும் கோறளைப்பற்று மத்திய செயலக பிரிவின் பிரதேச சபை இன்றளவில் உருவாக்கப்படவில்லை.

பிரதேச சபை உருவாக்கப்படாமல், எல்லைகள் நிர்ணயிக்கப்படாமல் நிர்வாக செயல்பாடுகள் முன்னெடுக்கப்படு கின்றன. ஆகவே பானம்பலன ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கு அமைவாக இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காணுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஐ)

# கிழக்கில் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்!

கொழும்பு, மார்ச் 06

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கல்முனையில் இயங்கும் ஒரு தீவிரவாத அமைப்பு குறித்து புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதையடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மேலும், உளவுத்துறை மற்றும் படையினர் அந்தத் தீவிரவாத அமைப்பு தொடர்பான விவரங்களை திரட்டி வருகின்றன. படையினர் தற்போதும் விழிப்புடன் இருப்பதாகவும் நிலைமையை தீவிரமாக மதிப்பிட்டு வருவதாகவும் கூறினார். (ஐ)

# அதிகார பகிர்வின் மூலமே இனப் பிரச்னைக்கு தீர்வு!

## சிறீநேசன் எம். பி. வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 06

ஒற்றையாட்சி முறைமை இந்த நாட்டில் தோல்வியடைந்துள்ளது. சமஷ்டி ஆட்சி முறைமை ஊடான அதிகார பகிர்வின் ஊடாகவே தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும். பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியும் - இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மாகாண சபை முறைமை தொடர்பில் விசேடமாக அவதானத்தில்கொள்ள வேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை 37 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இருப்பினும் இந்த மாகாண சபை முறைமையின் தற்போதைய நிலைமையை ஆராய வேண்டும்.

மாகாண சபைக்கு உரித்தாக்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. மொழிவாரியாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்க வேண்டும். ஓராண்டின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் மக்கள் வாக்கெடுப்பு ஊடாக இணைப்பு பற்றி சிந்திக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்து. அதுவும் நடக்கவில்லை - பிரிக்கப்பட்டுள்ளது.

திவிநெகும சட்டத்தின் ஊடாக மாகாண சபையின் அதிகாரத்தை மத்திய அரசாங்கம் பறித்துள்ளது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் இல்லை. அதிகாரங்கள் பரவலாக பறிக்கப்பட்டுள்ளன. இணைப்பும் இல்லை.

நடைமுறையில் உள்ள ஒற்றையாட்சி அரசமைப்பு முறைமை இந்த நாட்டில் தோல்வியடைந்துள்ளது.

ஒற் றையாட்சியால் இன நல்லிணக் கத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியவில்லை. சர்வதேச மட்டத்தில் சிறந்த நிலை யையும் பெற முடியவில்லை. மொத்தமாக சமூக, பொருளா தார மற்றும் கலாச்சார முறைமையில் ஒற்றையாட்சி முறைமை தோல்வியடைந்துள்ளது. ஆகவே, முறையான அதிகார பகிர்வில்லாமல் தேசிய பிரச் னைக்கு தீர்வு காண முடியாது. தேசிய நல்லிணக்கத்தை உறு திப்படுத்தவும் முடியாது. பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியாது - என்றார். (ஐ)

# ஆயுதங்களை தேடி நடத்திய அகழ்வுபணி கைவிடப்பட்டது



திருகோணமலை, மார்ச் 06

ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்ற சந்தேகத்தில் திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணி எதுவும் மீட்கப்படாத நிலையில் கைவிடப்பட்டது.

திருகோணமலை - கிண்ணியா - உப்பாறு விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டன என்று கூறி நீதிமன்றின் உத்தரவுடன் அகழ்வு பணி நடந்தது.

1990ஆம் ஆண்டு முதல் இந்தப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்த நிலையில் 2011ஆம் ஆண்டு இங்கு மக்கள் மீளக் குடியேறியிருந்தனர்.

இந்த நிலையிலேயே கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் இந்த அகழ்வு பணியை முன்னெடுத்தனர். திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் முன்னெடுக்கப்பட்ட இந்த அகழ்வு பணி எந்த ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்படாமல் கைவிடப்பட்டது. (ஐ)

# 10 வீடுகள் ஒரேநாளில் பயனாளிகளுக்கு!

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஊடாக 10 வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

கடந்த ஆண்டு அரசாங்கத்தின் நகர அபிவிருத்தி வீடமைப்பு மற்றும் புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியில் கல்முனை வடக்கு பிரதேச செயலக கிராமங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 28 வீடுகளை அமைப்பதற்காக நிதி உதவி வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அமைக்கப்பட்ட 10 வீடுகளே நேற்றைய தினம் கையளிக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீ ரங்கன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. குமுதராஜ் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# நள்ளிரவில் வீடுடைத்து நகை, பணம் திருட்டு!

காரைதீவு, மார்ச் 06

வீட்டார் உறக்கத்திலிருந்த நேரம் வீட்டை உடைத்து நுழைந்தவர்கள் நகைகள், பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நள்ளிரவு கடந்த நேரம் காரைதீவு - மாவடிப்பள்ளியில் இடம் பெற்றுள்ளது. நோன்பு வழிபாட்டை நிறைவு செய்துவிட்டு நித்திரையிலிருந்தவேளை, வீட்டின் கதவை உடைத்து திருட்டு இடம் பெற்றுள்ளது.

அதிகாலையில் எழுந்தபோதே நகைகள், பணம் திருடப்பட்டமை வீட்டாருக்கு தெரிய வந்தது. இதையடுத்து சம்பவம் தொடர்பில் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக போரிலிருந்து பின்வாங்க மாட்டோம்!

## கனடா பிரதமர் அறிவிப்பு



ஒட்டாவா, மார்ச் 06

**அமெரிக்காவுடனான வர்த்தக போரில் இருந்து நாம் பின் வாங்கப் போவதில்லை என்று கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற கையோடு பல அதிரடி நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இதில் ஒன்றாக அயல் நாடுகளுடனான கனடா, மெக்சிக்கோவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25 சதவீத வரியை விதித்தார். இதற்கு பதிலடியாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25சதவீத வரியை கனடாவும் விதித்தது. அத்துடன், அமெரிக்கப் பொருட்களுக்கு பதிலடி வரி விதிக்கப்படும் என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டு பொருட்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக ட்ரம்ப் எச்சரித்தார்.

இந்த நிலையில், கனடாவில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கும் அமெரிக்காவை எதிர்த்து போட்டியிடப் போவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடா மீதான வரி விதிப்பு நடவடிக்கையை வர்த்தக போர் என்று குறிப்பிட்டுள்ள ட்ரூடோ, இதன் மூலம் அமெரிக்க குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்படும். அமெரிக்காவுடனான வர்த்தக போரில் இருந்து பின் வாங்க போவதில்லை. கனடியர்கள் நியாயம் மற்றும் கண்ணிய மிக்கவர்கள். சொந்த நாட்டின் நல்லிணக்கம் ஆபத்தில் இருக்கும் போது சண்டையில் இருந்து பின்வாங்க மாட்டோம் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# பாகிஸ்தானில் தற்கொலை தாக்குதல் 9 பொதுமக்கள் பலி; 20 பேர் படுகாயம்!

இஸ்லாமாபாத், மார்ச் 06

பாகிஸ்தானில் இராணுவ வளாகம் மீது நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் 9 பொது மக்கள் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்கில் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் பன்னு என்ற பகுதியில் நேற்று முன்தினம் நடந்த இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் 3 குழந்தைகள், 2 பெண்களும் அடங்குவர்.

இரு கார்களில் வெடிமருந்து நிரப்பி மோதச் செய்தே இந்தத் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களை தொடர்ந்து உள்ளே நுழைய முயன்ற 6 தீவிரவாதிகளை பாகிஸ்தான் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

இந்த தாக்குதலுக்கு ஹபீஸ் குல் பகதூர் ஆயுத குழு பொறுப்பேற்றது. இது தலிபான் ஆதரவு தீவிவாத இயக்கமாகும். (ஐ)



# பொற்காலம் தொடங்கிவிட்டது

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



வாஷிங்டன், மார்ச் 06

அமெரிக்க ஜனாதிபதியாக நான் பொறுப்பேற்றவுடன் அமெரிக்காவின் பொற்காலம் தொடங்கிவிட்டது. அமெரிக்கர்களின் கனவை நனவாக்க உழைத்து வருகிறோம் - என்று அமெரிக்க பாராளுமன்றத்தில் உரையாற்றிய டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த 6 வாரங்களில், நான் கிட்டத்தட்ட 100 நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டுள்ளேன், 400இற்கும் மேற்பட்ட நிர்வாக நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

நான் பதவியேற்ற சில மணி நேரங்களுக்குள், அமெரிக்காவின் தெற்கு எல்லையில் அவசர நிலையை பிரகடப்படுத்தினேன். நமது நாட்டின்மீதான படையெடுப்பைத் தடுக்க அமெரிக்க இராணுவத்தையும் எல்லைப் படையையும் நான் நிறுத்தினேன்.

இதன் விளைவாக, கடந்த மாதம் சட்டவிரோதமாக நாட்டுக்குள் வருபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அமெரிக்க வரலாற்றில் மிக மோசமான முந்தைய ஆட்சிக்காலத்தில், ஒரு மாதத்தில் இலட்சக்கணக்கான மக்கள் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்திருந்தனர். பெரும்பாலான நிர்வாகங்கள் 4 அல்லது 8 ஆண்டுகளில் நிறைவேற்றியதை விட 43 நாட்களில் நாம் அதிகமாகச் சாதனை செய்துள்ளோம் - என்றார். (ஐ)

# சூடானுக்கு 2 தொன் மருந்து இந்தியா அனுப்பி வைத்தது!

புதுடில்லி, மார்ச் 06

போரால் பாதிக்கப்பட்ட நாடானா சூடானுக்கு 2 தொன் உயிர் காக்கும் மருந்துகளை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

சூடானில் கடந்த இரு ஆண்டுகளாக உள்நாட்டு போர் தீவிரம் பெற்றுள்ளது. நாட்டின் ஆட்சியை இராணுவம் கைப்பற்றியுள்ள நிலையில் துணை இராணுவ படை அதற்கு எதிராகப் போரிட்டு வருகிறது.

இந்தப் போரில் இரு தரப்பிலும் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 2.5 கோடிக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே 2 தொன் உயிர் காக்கும் மருந்துகளை இந்தியா சூடானுக்கு அனுப்பி வைத்துள்ளது. (ஐ)

# குருதி கொடை மூலம் 24 இலட்சம் சிசுக்களை காப்பாற்றிய ஜேம்ஸ் ஹரிசன் காலமானார்

சிட்னி, மார்ச் 06

இரத்த தானம் மூலமாக 24 இலட்சம் குழந்தைகளின் உயிர்களை காப்பாற்றிய அவுஸ்திரேலியாவின் ஜேம்ஸ் ஹரிசன் (வயது 88) காலமானார்.

இவர் தனது 18 வயது முதல் 81 வயதுவரை 1,173 முறை இரத்த தானம் செய்துள்ளார். அவரின் இரத்தத்தில் அன்ரி- டி **(Anti-D)** எனப்படும் அரிய வகை எதிர்ப்பு சக்தி இருந்தது. இது பிரசவத்தின்போது தாயிடம் இருந்து குழந்தைகளுக்கு பரவும் தீங்கு விளைவிக்கும் நோய்க்கிருமிகளை தடுக்க உதவியுள்ளது.

ஜேம்ஸ் ஹரிசனுக்கு 14 வயதில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. இதன்போது, அவருக்கு 13 யுனிட் இரத்தம் ஏற்றப்பட்டது. இது தானமாகக் கிடைத்த இரத்தமாகும். இரத்த தானத்தால் உயிர் பிழைத்தமையால் தானும் இரத்ததானம் செய்ய வேண்டும் என்று ஹரிசன் விரும்பினார்.

இதனால், 18 வயதில் இரத்த தானம் செய்ய ஆரம்பித்தார். அந்தநேரத்தில், அவுஸ்திரேலியாவில் ரீசஸ் நோயால் பிறந்த சிசுக்கள் மரணமாகின. இதற்கு தீர்வாக அன்ரி - டி எதிர்ப்பு சக்தி தேவைப்பட்டது. இவரின் இரத்தத்தில் அது அதிகம் இருந்தது. இதனால், அவரின் இரத்தத்துக்கு அதிக தேவை ஏற்பட்டது. இதனால், அவர் இரு வாரங்களுக்கு ஒருமுறை குருதி தானம் செய்தார்.



### அன்ரி-டி என்றால் என்ன?

அன்ரி- டி தடுப்பூசிகள் கருவில் உள்ள மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு வரும் ஹீமோலிடிக் நோய் அல்லது எச். டி. எவ். என். எனப்படும் ஆபத்தான இரத்தக் கோளாறிலிருந்து பாதுகாக்கின்றன. இந்த நோய் கர்ப்ப காலத்தின்போது வருகிறது. தாயின் இரத்த சிவப்பணுக்கள் கருவில் வளரும் குழந்தையின் இரத்த சிவப்பணுக்களுடன் பொருந்தாத போது இந்த நோய் பாதிப்பு ஏற்படுகின்றது.

தாயின் நோய் எதிர்ப்பு அமைப்பு குழந்தையின் இரத்த அணுக்களை அச்சுறுத்தலாகக் கருதி அவற்றைத் தாக்க எதிர்ப்பு சக்திகளை உருவாக்குகிறது. இது கருவில் உள்ள குழந்தைக்கு கடுமையான தீங்கு விளைவிக்கக்கூடும். இதனால் குழந்தைக்கு இரத்த சோகை, இதய செயலிழப்பு அல்லது மரணம் கூட ஏற்படலாம். 1960-களில் அன்ரி-டி தடுப்பூசிகள் உருவாக்கப்படுவதற்கு முன்பு, எச். டி. எவ். என். நோயால் பாதிக்கப்பட்ட இரண்டு குழந்தைகளில் ஒன்று உயிரிழந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 60 ஆண்டுகள் இவர் இரத்த தானம் செய்தமையால் 24 இலட்சம் சிசுக்களின் உயிரை காப்பாற்றினார் என்று அறிவிக்கப்பட்டது. இதனால், அவர் தங்கக் கை மனிதர் என்று புகழ் பெற்றார்.

இந்த நிலையில், ஜேம்ஸ் ஹரிசன் தனது 88ஆவது வயதில் காலமானார் என்று அவரின் குடும்பத்தினர் அறிவித்தனர். (ஐ)

# அயோத்தி இராமர் கோயிலில் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் சதி!

## 19 வயது இளைஞர் கைது

ஹரியானா, மார்ச் 06

அயோத்தி இராமர் கோயிலில் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ. எஸ். ஐ. சதி செய்ததாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த சம்பவம் தொடர்பில் உத்தர பிரதேசத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் அவரிடம் இருந்து 2 கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டன.

அயோத்தியில் முகலாயர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட பாபர் மசூதி 1992ஆம் ஆண்டு இடிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி அங்கு இராமர் கோயில் கட்டப்பட்டது. 2020ஆம் ஆண்டு கட்டத் தொடங்கிய இந்த இராமர் கோயில் கடந்த ஆண்டு ஜனவரியில் திறக்கப்பட்டது. அன்றுமுதல் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையிலேயே, அங்கு தாக்குதல் நடத்த பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ. எஸ். ஐ. அமைப்பு திட்டமிட்டுள்ளதாகவும் இந்தத் தாக்குதலில் ஈடுபட முனைந்தவரை தாம் கைது செய்துள்ளனர் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

மேலும், கைதான நபரிடம் இருந்து தாக்குதல் திட்டம் குறித்த பென்டிரைவ் ஒன்றும் வரைபடங்கள், தாக்குதல் நடத்துபவர்களுக்கான அறிவுறுத்தல்கள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் சதித் திட்டம் குறித்து ஹரியானா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், இந்த சம்பவத்தில் மேலும் பலர் கைதாக வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



சம்பியன்ஸ் கிண்ணம்:

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிப் போட்டியில் இந்தியா

## - 14 ஆண்டுகால தொடர் தோல்விக்கு முடிவு -

டுபாய், மார்ச் 06

ஐ. சி. சியின் நொக்-அவுட் சுற்றில் 14 ஆண்டுகளாக அவுஸ்திரேலியாவை வீழ்த்த முடியவில்லை என்ற சோகத்துக்கு முடிவுரை எழுதியுள்ளது இந்திய கிரிக்கெட் அணி. அத்துடன், சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் முதல் அரையிறுதியில் அவுஸ்திரேலியாவில் 4 விக்கெட்களால் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது இந்திய அணி.

264 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ரோஹித் சர்மா மற்றும் /ப்மன் கில் இணை தொடக்கம் கொடுத்தது.

கில் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ரோஹித் சர்மா 29 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மூன்றாவது விக்கெட்டுக்கு விராட் கோலி மற்றும் ஸ்ரேயாஸ் ஐயர் இணைந்து 91 ஓட்டங்களை எடுத்தனர். ஸ்ரேயாஸ், 62 பந்துகளில் 45 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். ஸாம்பா பந்தில் அவர் போல்ட் ஆனார். அக்சர் பட்டேல் 27 ஓட்டங்கள் எடுத்தார்.

கே.எல்.ராகுல் விரைவாக ஓட்டங்களை குவித்தார். கோலி 98 பந்துகளில் 84 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஹர்திக் பாண்டியா 24 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்தார். மூன்று சிக்ஸர்களை அவர் விளாசி ஆட்டத்தில் அழுத்தத்தைக் குறைத்தார். 48.1 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 267 ஓட்டங்கள் எடுத்து இந்தியா வெற்றி பெற்றது.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

கொன்லி ஓட்டம் எதையும் பெறாமல் முதல் ஓவரிலேயே வீழ்ந்தார். இதையடுத்து ஸ்மித் களம் புகுந்தார். அதுவரை மறுமுனையில் அமைதி காத்த ஹெட், அதிரடிக்கு மாறினார். 4 ஓவர்கள் முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 17 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஹர்திக், ஷமி பந்து வீச்சை துவம்சம் செய்தார். ஷமி வீசிய இன்னிங்ஸின் 5ஆவது ஓவரில் ஹட்ரிக் பௌண்ட்ரி விளாசினார்.

அவுஸ்திரேலிய அணியின் ஓட்டக் குவிப்பை தடுக்கும் விதமாக 9ஆவது ஓவரில் வருண் சக்கரவர்த்தியை அணித்தலைவர் ரோஹித் பந்து வீச செய்தார். அந்த ஓவரின் இரண்டா வது பந்தில் ஹெட் விக்கெட்டை வருண் வீழ்த்தினார். அதன் மூலம் ஸ்மித்,



ஹெட் கூட்டணி முடிவுக்கு வந்தது. ஹெட் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த லபுஷேன், ஸ்மித் உடன் விக்கெட்டை இழக்காமல் நிதானமாக ஆடினர். இந்தக் கூட்டணி 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். 36 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்த நிலையில் லபுஷேனை ஜடேஜா எல். பி. டபிள்யூ முறையில் வெளியேற்றினார். தொடர்ந்து இங்கிலிஸையும் ஜடேஜா ஆட்டமிழக்க செய்தார். பின்னர் அலெக்ஸ் கேரி உடன் இணைந்து 54 ஓட்டங்களை இணைப்பாட்டமாக அமைத்தார் ஸ்மித்.

96 பந்துகளில் 73 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷமி பந்து வீச்சில் ஸ்மித் போல்ட் ஆனார். அதற்கு முன்பு வரை அவுஸ்திரேலியா 300 ஓட்டங்களை எடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஸ்மித் விக்கெட் அதை மாற்றியது. மக்ஸ்வெல் வந்த வேகத்தில் வெளியேறினார். அக்சர் பட்டேல் அவரது விக்கெட்டை கைப்பற்றினார். அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்த கேரியை ரன் அவுட் செய்து ஸ்ரேயாஸ் வெளியேற்றினார். அவர் 57 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்தார். 49.3 ஓவர்களில் 264 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது அவுஸ்திரேலிய அணி.

சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ)

# ஒருநாள் போட்டி ஸ்ரீவ் ஸ்மித் ஓய்வு


டுபாய், மார்ச் 06

அவுஸ்திரேலிய அணியின் நடசத்திர வீரர் ஸ்ரீவ் ஸ்மித் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.


தற்போது நடைபெற்று வரும் ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண தொடரில் அணித் தலைவராக ஸ்ரீவ் ஸ்மித் செயல்பட்டிருந்தார். நேற்று முன்தினம் நடந்த அரையிறுதிப் போட்டியில் அவர் தலைமையிலான ஆஸி அணி இந்தியாவிடம் தோல்வியடைந்தது.

இந்த நிலையிலேயே ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்துள்ளார். எனினும், அவர் ரி - 20, டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்தும் விளையாடுவார்.

இதேவேளு, 2028ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும் ஒலிம்பிக்கில் பங்கேற்க வேண்டும் என்ற விருப்பத்தையும் அவர் வெளியிட்டுள்ளார். 2028 ஒலிம்பிக் போட்டிகளில் முதல் முறையாக ரி -20 போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஐ. சி. சி. வரலாற்றில் கோலி முதல் சாதனை!



டுபாய், மார்ச் 06

ஐ. சி. சியின் நொக் அவுட் போட்டிகளில் 1000 ஓட்டங்களை கடந்த உலகின் முதல் வீரர் என்ற பெருமையை இந்தியாவின் விராட் கோலி பெற்றுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் விராட் கோலி 84 ஓட்டங்களை குவித்தார். இதன்போதே அவர் இந்த சாதனையை படைத்தார்.

இது தவிர, அவர் ஒருநாள் போட்டிகளில் மூன்றாவது இடத்தில் துடுப்பெடுத்தாடி 12,000 ஓட்டங்களை எடுத்த இரண்டாவது வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

மேலும், இந்தப் போட்டியில் அரைச்சதம் அடித்ததன் மூலம், சச்சின் டெண்டுல்கரின் சாதனையையும் விராட் கோலி முறியடித்தார். ஐ. சி. சி. போட்டிகளில் அதிக முறை அரைச்சதம் அடித்த வீரர் என்ற பெருமையை விராட் தற்போது பெற்றுள்ளார்.

இதன்படி, 53 இன்னிங்ஸ்களில் விராட் கோலி 24 அரைச்சதங்களை அடித்துள்ளார். இதே நேரத்தில் சச்சின் டெண்டுல்கர் 58 இன்னிங்ஸ்களில் 23 அரைச்சதங்களை அடித்துள்ளார். (ஐ)

# அதிக சிக்ஸர்கள் ரோஹித் சாதனை

டுபாய், மார்ச் 06


ஐ. சி. சி. ஒருநாள் தொடர்களில் அதிக சிக்ஸர் விளாசிய இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ரோஹித் சர்மா புதிய சாதனை படைத்துள்ளார்.

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் டுபாயில் நடந்த அரையிறுதி போட்டியில் இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதின.


இதில், ஐ. சி. சி. தொடர்களில் ஒரு அணியை 4 முறை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றவர் என்ற சாதனையை ரோஹித் சர்மா படைத்தார்.

அதுமட்டுமின்றி, ரோஹித் 3 பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் 28 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தப் போட்டியில் சிக்ஸர் அடித்தபோது ஐ. சி. சி ஒருநாள் தொடர்களில் அதிக சிக்ஸர் விளாசியவர் என்ற சாதனைக்கும் சொந்தக்காரரானார். ரோஹித் சர்மா 65 சிக்ஸர் விளாசி முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவருக்கு அடுத்தபடியாக கெயில் (64 சிக்ஸர்கள்) உள்ளார். (ஐ)




# மெரிடா ஓப்பன் ரென்னிஸ் எம்மா நவாரோ சம்பியன்!



மெக்சிக்கோ சிற்றி, மார்ச் 06

மெரிடா ஓப்பன் ரென்னிஸில் அமெரிக்காவின் எம்மா நவாரோ சம்பியன் பட்டம் வென்றார்.

மெரிடா ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெக்சிகோவில் நடைபெற்றது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கொலம்பியாவின் எமிலியானா அரங்கோ, அமெரிக்காவின் எம்மா நவாரோ ஆகியோர் மோதினர்.

அதிரடியாக ஆடிய எம்மா நவாரோ 6-0, 6-0 என எளிதில் கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச குற்றவியல்...

இந்த விவகாரங்கள் தொடர்பான தீர்மானங்கள் பிரச்னைக்குரியவையாக காணப்படுகின்றன.இவை அரசியல் சூழமைவை சரியாக இனங் காணத் தவறிவிட்டன என்று தெரிவித்த நாங்கள் பின்வரும் விடயங்களை குறிப்பிட்டிருந்தோம்.

அனைத்து முன்னைய தீர்மானங்களும் ஜெனிவாவில் பொறுப்புக்கூறலை தேக்கமடையச் செய்கின்றன. மேலும், இவை இலங்கைக்கு காலஅவகாசத்தை வழங்குகின்றன. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இரண்டு உறுப்பினர்களை கொண்டுள்ள இணை அனு சரனை நாடுகள், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தீர்மானத்தை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என நாங்கள் கேட்டிருந்தோம்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு உதவும் வகையில் ஆதாரங்களை சேகரிப்பதற்கான சுயாதீன அமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

இலங்கையில் தொடரும் வன்முறைகளை கண்காணித்து அறிக்கையிடுவதற்காக விசேட அறிக்கையாளரை நியமிக்கும் வகையிலும் வடக்கு, கிழக்கில் மனித உரிமைகள் ஆணையாளரின் பணிமனைகளை திறக்கும் விதத்திலும் தீர்மானங்களில் மாற்றங்களை கொண்டுவரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

பாதுகாப்பு, அபிவிருத்தி, தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பதற்காக அரசாங்கம் தொடர்ந்தும் இராணுவத்தையும் அரச திணைக்களங்களையும் பயன்படுத்துவதையும் முன்னைய தீர்மானங்கள் கருத்தில் கொள்ள தவறிவிட்டன என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணிமனை மற்றும் இழப்பீடுகள் தொடர்பான பணிமனை ஆகியவை குறித்து நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் தீர்மானங்கள் காணப்படுவது குறித்த எங்கள் கரிசனையை வெளியிட்டிருந்தோம். இரு பணிமனைகளும் அவை உருவாக்கப்பட்ட நோக்கம் - அவற்றின் கட்டமைப்பு ஆகியவற்றில் தவறுகளை கொண்டவையாக காணப்படுகின்றன.

இதேவேளை, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாகக்கூட 13ஆவது திருத்தத் தை நாங்கள் ஏற்க தயாரில்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இலங்கை குறித்த முதலாவது தீர்மானம் 2012 இல் நிறைவேற்றப்பட்டு பல வருடங்களாகிவிட்டன. எங்களின் எச்சரிக்கைகள் ஒவ்வொன்றும் சரியானது என்பது நிரூபணமாகியுள்ளது.

அரசியல் கைதிகளை தடுத்து வைப்பதற்கு பயன்படுத்தப்படும் சட்டம் நீதியானதல்ல - அதனை நீக்கவேண்டும் என நீதியமைச்சர் உட்பட முக்கிய அமைச்சர்கள் தெரிவித்துள்ள போதிலும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் வாடுகின்றனர்.

இலங்கையின் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னைய தீர்மானங்களை, இலங்கை விவகாரத்தில் தலையிடுபவை, அரசியல் நோக்கம் கொண்டவை என நிராகரித்துள்ளதுடன், உள்நாட்டு பொறிமுறைகள் குறித்து கவனம் செலுத்தப்படும் என்று கூறியுள்ளது.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ஆகக்குறைந்தது 2024 ஒகஸ்ட் முதல் யுத்தத்தின்போது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியமைக்காகவோ அல்லது மனித உரிமை மீறல்களுக்காகவோ எவரும்தண்டிக்கப்படமாட்டார்கள் என சிங்கள மக்களுக்கு மீண்டும்மீண்டும் உறுதியளித்துள்ளார். உருவாக்கப்படும் எந்த பொறிமுறையும் உண்மையை கண்டறிவதை நோக்கமாக கொண்டிருக்கும் பொறுப்புக்கூறலை நோக்கமாகக் கொண்டிராது என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறான சூழ்நிலைகளில் இந்த அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களை போல குற்றவாளிகளுக்கு எதிராக சுயவிருப்புடன்நடவடிக்கைகளை எடுக்காது என்பது மிகவும் தெளிவாகத் தெரியவந்துள்ளது. குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவேண்டும் என்பதையே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வலியுறுத்திவருகின்றனர். மீளநிகழாமைக்கு இது மிகவும் அவசியம்.

கடும் கவலையை ஏற்படுத்தும் பின்னணியில் நீங்கள் எங்களின் இந்த கடிதத்திலும் முன்னைய கடிதத்திலும் வலியுறுத்தப்பட்ட விடயங்களை கருத்தில் எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

பொறுப்புக்கூறல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி என்ற அடிப்படையில் கடந்தகால தீர்மானங்களை பின்பற்றி கொண்டுவரப்படும் எந்தத் தீர்மானத்தினாலும் நாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் ஆதரவை பெறமுடியாது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்காலத்தில் கொண்டுவரப்படும் தீர்மானம் தமிழ் மக்களின் சம்மதத்தை பெறவேண்டும் என்றால் நாங்கள் இந்த விடயத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்ட - இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும் ஏனைய சர்வதேச நீதி கட்டமைப்புகளிலும் பாரப்படுத்தும் புதிய தீர்மானம் அவசியம் - என்றுள்ளது.

(ஐ)

## சுகாதார...

விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், நேற்று சுகதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடனான சந்திப்பைத் தொடர்ந்து எதிர்வரும் 17ஆம் திகதி வரை பணிப்புறக்கணிப்பு போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்திய மீன்பிடியை...

மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்ற வகையில் செயல்படும் இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்தத் தவறினால் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி உள்ளிட்ட வடபகுதி மீனவர்கள் வீதிகளில் இறங்கிப் போராடும் நிலைமை ஏற்படும். அத்தகைய நிலையை ஏற்படுத்த வேண்டாம் - என்றும் அவர் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது தெரிவித்தார். (ஐ)

## இந்திய...

படகுகள் இயங்குவதன் மூலம் சூழல் மாசடைகிறது, எமது வடபகுதி மீனவர்கள் நவீன தொழில்நுட்ப முறைகள் அற்ற இயற்கையுடன் கூடிய மரபு ரீதியான முறைகளைப் பயன்படுத்தியே மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இதனால் இந்த முறையானது மீன்வளத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

கடற்றொழில் அமைச்சு மற்றும் கடற்படை தரவுகளின்படி நாளொன்றுக்கு 35 கோடி ரூபாய் பெறுமதியான மீன் வளங்கள் குறிப்பாக வடக்கு கடற்பகுதியில் இருந்து எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடி இழுவைப் படகுகளால் சூறையாடப்படுகின்றது.

ஆனால், எமது மீனவர்கள் போதிய வருமானமின்றி வாழ்வாதாரத்துக்கு ஏங்கும் மக்களாக உள்ளனர் - என்றும் கூறினார். (ஐ)

## இருபெரும்...

கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. 41 போட்டிகள் சமநிலையிலும் முடிவடைந்துள்ளன. 9 போட்டிகள் முடிவின்றி கைவிடப்பட்டன.

**பொன் அணிகளின் போர்**

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணிகளின் பெருந்துடுப்பாட்டப் போட்டி 'பொன் அணிகளின் போர்' என்று வர்ணிக்கப்படுகிறது.

108ஆவது ஆண்டாக நடைபெறவுள்ள இந்தப் பெருந்துடுப்பாட்டப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. சனிக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வழக்கமாக இரு தினங்களே நடத்தப்பட்டு வந்த இந்தப் பெருந்துடுப்பாட்டப் போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முதல் தடவையாக 3 தினங்கள் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடந்த 107 போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 35 தடவைகளும் யாழ்ப்பாண கல்லூரி 16 தடவை களும் வெற்றி பெற்றுள்ளன. 35 போட்டிகள் சமநிலையில் முடிவடைந் துள்ளன. ஒரு போட்டி முடிவின்றி கைவிடப்பட் டது.

முன்னதாக இந்த இரு பெருந்துடுப்பாட்டப் போட்டிகளும் கடந்த வாரம் 27ஆம் திகதி ஆரம்பமாகவிருந்தது. காலநிலை சீரின்மையால் ஒத்திவைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரூ.6 கோடி...

ஏ. எச். எம். எச். அபேரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் எம். பி. முல்லைத்தீவு, மன்னாரில் தீயணைப்பு பிரிவு இல்லாததால் ஏற்படும் நெருக்கடிகள் தொடர்பில் சுட்டிக் காட்டினார். அவருக்குப் பதிலளித்து பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மன்னாரில் மட்டுமின்றி நாட்டில் இன்னும் பல பிரதேசங்களில் இந்தப் பிரச்னை உள்ளது. உள்ளூராட்சி நிறுவனங்களில் தீயணைப்பு பிரிவு அமைக்க மத்திய அரசாங்கத்தால் நிதி வழங்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் தேவையான உபகரணங்களை கொரிய அரசு வழங்க இணங்கியுள்ளது. இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபை, மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபையில் தீயணைப்பு பிரிவுகளை அமைக்க உலக வங்கியின் உதவியுடன் 6 கோடி ரூபாய் பெறுமதியான வேலைத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 12இல்)

## இந்தியாவை...

இருக்காமல் - உங்களை நம்பி மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வடக்கு கரையோர பகுதிகளில் மீனவர் சமூகம்தான் அதிகளவில் வாழ்ந்து வருகிறது. போர் காலத்திலும் சரி, தற்போதும் சரி மிக பின்னோக்கிய நிலையில் உள்ளனர். அவர்களின் குழந்தைகளின் கல்வி நிலைமை வருமானமின்றி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசாங்கம் அதில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்திய இழுவைப் படகுகளின் பிரச்னை வடக்கில் பூதாகரமாகியுள்ளது. எனினும், இந்தியாவைமீறி இன்னொரு நாடு மூக்கு நுழைப்பதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம் - என்றார். (ஐ)

## சிறந்த...

வேண்டும். நகரங்கள் மாத்திரமின்றி கிராம அபிவிருத்தியை மையப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத் திட்டம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (ஐ)

## கல்வி...

புதிய கல்வி சீர்திருத்தத்தில், அர்ப்பணிப்புடன் செயல்படும், நல்ல திறன் கொண்ட, கல்வியில் வளமிக்க கல்வியாளர்களை உருவாக்க அரசாங்கம் விரும்புகிறது.

கல்விக் கட்டமைப்பில் சிக்கல் இருப்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்கிறோம். அதை சரிசெய்ய வேண்டும். அதை உடனடியாகச் செய்ய முடியாது. இது ஒரு செயல்முறை. அரசாங்கத்தின் தலையீடு மட்டும் போதாது. அமைப்பை மாற்றுவதற்கு, நமக்குள்ளும் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும். அமைப்பு என்பது நாம்தான். நாம் மாறினால், அமைப்பு தானாகவே மாறும். அதற்காக, கல்வி பேரவை ஒன்றை உருவாக்குவோம்." என்றார்.

## தமது...

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டில் வடக்கு மாகாணத்தில்தான் அதிகளவான மீனவர்கள் உள்ளார்கள். அத்துடன், மீன்பிடி மற்றும் அதனுடனான தொழில்களில் அதிகளவானோர் ஈடுபடுகிறார்கள். வடக்கு பகுதியில் வாழும் மீனவர்கள் கஷ்டமான வாழ்க்கை முறைமையில்தான் உள்ளார்கள். கடற்றொழிலை மேம்படுத்துவதை போன்று அந்தத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த வேண்டும் அதற்கான பொறுப்பு கடற்றொழில் வளங்கள் அமைச்சுக்கு உண்டு.

வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடி மற்றும் அதனுடான இணை கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன. வடக்கில் அதிகளவான கடற்றொழிலு டன் தொடர்புடைய வளங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் தெற்கில் உள்ள மீனவர்களை காட்டிலும் வடக் கில் உள்ள மீனவர்கள் வாழ்வாதார ரீதி யில் கஷ்டப்படுகிறார்கள்.

இந்திய மத்திய அரசிடமும் தமிழ் நாடு அரசிடமும் விசேட கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். யுத்தம் மற்றும் பல்வேறு காரணிகளால் இலங்கையர்கள் படகு ஊடாக அவுஸ்ரேலியாவுக்கு செல்லும்போது அவுஸ்திரேலிய அரசாங்கம் "படகு ஊடாக அவுஸ்ரேலியாவுக்கு வர வேண்டாம்" என்று பல விளம்பரங்களை அழுத்தமாக வெளியிட்டது. அத்துடன், சட்ட ரீதியிலான அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டன.

மீன்பிடி கைத்தொழிலை தவிர்த்து வடக்கு மக்களுக்கு வேறு எந்த கைத்தொழில்களும் கிடையாது. வடக்கு மக்களின் ஒரே ஜீவனோபாயத்தை இல்லாதொழிக்க இடமளிக்க வேண்டாம் என்று இந்திய அரசிடம் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். இந்தியாவில் உள்ள சட்டங்களை செயல்படுத்துங்கள். இவற்றை செயல்படுத்தாமல் வடக்கு மக்களின் நலன்புரி பற்றி பேச முடியாது.

இது பாரதூரமான பிரச்னை. அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளை இந்திய அரசாங்கத்தினால் நிறுத்த முடியும். இந்திய அரசாங்கம் இலங்கைக்கு பல உதவிகளை செய்கிறது. வடக்கு மக்களின் இந்த பிரச்னைக்கு தீர்வு காணாமல் வழங்கும் உதவிகள் உண்மையானதாக அமையாது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# யாழிலிருந்து முல்லைத்தீவுக்கு வருகிறது தீயணைப்புப் படை!

**செல்வம் எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு**

கொழும்பு, மார்ச் 06

**முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் தீயணைப்புப் படை இல்லாத காரணத்தினால் திடீரென்று ஏற்படும் தீ விபத்துகளினால் பெரும் சிக்கல்களை எதிர் நோக்கவேண்டிய இருப்பதாக ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.**

யாழ்ப்பாணத்தில் இருந்து தீயணைப்புப்படை வரவேண்டிய நிலைமை உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முல்லைத்தீவு மாவட்டம் நிலப்பரப்பால் பெரிய மாவட்டமாக உள்ளது. இம் மாவட்டத்தில் கடைகள், விவசாய நிலங்கள் என்பவற்றில் தீ ஏற்பட்டால் உடனடியாக அணைப்பதற்கு தீயணைப்புப் படை இல்லை.

வவுனியா அல்லது யாழ்.மாவட்டத்தில் இருந்து தீயணைப்புப் படை வந்து தீயை அணைக்கவேண்டிய நிலையில் உள்ளது.

மக்கள் தீயால் பாதிக்கப்படும் பொழுது தீயை அணைப்பதற்கு பெரும் கஸ்டப்படுகிறார்கள். இதனை அரசு கருத்தில் கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்புப் படையை உருவாக்கவேண்டும். மன்னார் மாவட்டத்தில் பல கடைகள், பனைகள், வயல் நிலங்கள் என்பவை உள்ளன.

இவற்றில் தீ பரவல் ஏற்பட்டால் தீயை அணைப்பதற்கு மன்னார் மாவட்டத்தில் தீயணைப் புப் படை இல்லை.

அண்மையில் மன்னாரில் பல பனைகள் எரிந்து தீயை அணைக்க முடியாத நிலை ஏற்பட்டது. பல பனைகள் எரிந்து முடிவடைந்த பின்னரே வவுனியா வில் இருந்து தீயணைப்புப் படை வந்தது.

நாங்கள் கடந்த அரசாங்கத்திடமும் இந்த இரு மாவட்டங்களுக்கும் தீயணைப்புப் படையை உருவாக்க வேண்டும் என்று கேட்டு இருந்தோம். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை-என்றார். (அ)

## தாதியர்கள் இன்று காலை 3 மணி நேரப் போராட்டம்!

கொழும்பு, மார்ச் 06

மேலதிக நேரக் கொடுப்பனவு குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, இன்று முற்பகல் 10 மணி முதல் 3 மணித்தியாலங்களுக்கு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்த அந்த சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சமன் ரத்னப்பிரிய- குறித்த காலப்பகுதியினுள் சகல வைத்தியசாலைகளுக்கும் முன்பாக தங்களது சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தார்.

வைத்தியர்களுடனான கலந்துரையாடலிலும் கூட அவர்கள் கோரிய கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாக அறியமுடிகிறது.

எனவே, தங்களுக்கு நியாயமான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி இன்று 3 மணிநேர பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## டெய்சி ஆச்சி கைது!

கொழும்பு, மார்ச் 06

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவின் மகன் யோஷித ராஜபக்‌ஷவின் பாட்டியான டெய்சி ஆச்சி என அறியப்படும் டெய்சி பொரெஸ்ட் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு சென்றவேளையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட டெய்சி பொரெஸ்ட் கடுவலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிதி மோசடி விவகாரம் தொடர்பில் யோசித மற்றும் அவரது பாட்டியிடம் ஏற்கனவே விசாரணை நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உள்ளூராட்சி தேர்தலில் விமல் தனித்து போட்டி!

கொழும்பு, மார்ச் 06

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமது கட்சி தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை. பேரனர்த்தத்தை தரக்கூடிய மழை என்று தெரிந்தால் ஒதுங்கியிருக்க வேண்டும். அவ்வாறுதான் நாம், அதனை அறிந்து வீட்டுக்குள் இருந்தோம்.

இப்போது அனர்த்தத்தின் பாதிப்பை மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நாம் தனித்து போட்டியிடவுள்ளோம்.

மேலும், எனது நூல் வெளியீடு நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. அதற்கென சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தை பணம் செலுத்தி முன்பதிவு செய்திருந்தோம்.

ஆயினும் இறுதிக் கட்டத்தில் அரச மேலிடத்தின் உத்தரவின் பிரகாரம் நமக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் நீதிமன்றத்தை நாடுவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ)

## யாழ் வீடொன்றிலில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 06

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்று புதன்கிழமை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

41 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் குடும்ப பிரச்னை காரணமாக தனது வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## மதுபோதையில் இ.போ.ச. பஸ்ஸை செலுத்திச் சென்ற சாரதி சிக்கினார்

கொழும்பு, மார்ச் 06

மது போதையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸை செலுத்திச் சென்ற சாரதி ஒருவர் வெள்ளவாய பொலிஸ் போக்குவரத்து பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளவாய பொலிஸ் போக்குவரத்து பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே சாரதி கைது செய்யப்பட்டார்.

தனமல்வில பகுதியிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸின் சாரதியே கைது செய்யப் பட்டுள்ளார்.

இதனையடுத்து, குறித்த பஸ்ஸில் பயணித்த பயணிகள் அனைவரும் மற்றுமொரு பஸ்ஸில் ஏற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வெள்ளவாய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## ஜனாதிபதி ஊடக பிரிவில் பொருட்கள் காணாமல்போன வழக்கு ஒகஸ்ட்டில்!

கொழும்பு, மார்ச் 06

ஜனாதிபதி செயலகத்தின் ஊடக பிரிவில் இருந்து பொருட்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பான வழக்கை ஒகஸ்ட் 6ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

கொழும்பு கோட்டை நீதவான் நிலுப்புலி லங்காபுர நேற்று இந்த வழக்கை விசாரணைக்கு வந்தபோது உத்தரவு பிறப்பித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் ஊடக பிரிவில் இருந்து ரூ.162 மில்லியன் மதிப்புள்ள பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

காணாமல்போன பொருட்கள் எங்கு சென்றன, அவை பிற துறைகளுக்கு மாற்றப்பட்டனவா, அவற்றின் உண்மை தன்மை குறித்து விரிவான விசாரணை நடத்தப்படுவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த விசாரணை, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதி செயலக அதிகாரிகள் குழுவொன்று அனுப்பிய மொட்டைக்கடிதாசி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டதாக விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்தது. (அ)

## கொழும்புக்கு அழைக்கப்பட்ட மாவட்டத் தேர்தல் அதிகாரிகள்

**சனியன்று விசேட கலந்துரையாடல்**

கொழும்பு, மார்ச் 06

மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாவட்ட உதவி தேர்தல் ஆணையர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, அவர்களுடன் நாளை மறுதினம் சனிக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவில் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அதன்போது, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை திட்டமிடுவது மற்றும் அவை தொடர்பாக எழும் பிரச்னைகள் குறித்து தேர்தல் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை 12 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## யாழில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அரிசி ஆலை உரிமையாளருக்கு இழப்பீடு

கொழும்பு, மார்ச் 06

அரச காப்புறுதி நிறுவனமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால், யாழ்ப்பாண மாவட்டத்தில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அரிசி ஆலை உரிமையாளருக்கு, இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில், 30 விவசாயிகளின் நெல் களஞ்சியபடுத்தபட்டிருந்தது.

கடந்த டிசம்பர் மாதம், களஞ்சியசாலைக்குள் வெள்ளம் உட்புகுந்தனால், இந்த நெல் மூடைகள் அழிவடைந்தன.

இந்த நிலையில், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன சங்கானை கிளையில், குறித்த நபர், ஏற்கனவே 44 ஆயிரம் ரூபாவை வருடாந்த காப்புறுதி தொகையாக செலுத்திய நிலையில், 17 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாவை, காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய பொது காப்புறுதி முகாமையாளர் அஜித்குமார் வழங்கினார்.

இதன் போது, சங்கானை கிளை முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 06.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org